# அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 319/2010 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர்திரு.R. இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 16.12.2024 |
| பெயர் சௌந்தர் ராஜன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

12 வது பிரதிரவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–

4. எனக்கு எழுத படிக்க தெரியும். எங்களுக்கு சேரவேண்டிய சொத்தை என் தாத்தாவின் தம்பி அவரது வாரிசுகளுக்கு எழுதிவைத்துவிட்டார் அதால் வழக்கு தாக்கல் செய்தோம். எனது தாத்த பெயர் சின்னசாமி. எனது தாத்தவுடன் பிறந்தவர்கள் 4 பேர் அவர்கள் பாலசுப்பிரமணியன் , எனது தாத்தா, கண்ணியப்பன், துறைசாமி. தாவா சொத்து எனது தாத்தாவின் தாத்தா திரு.ஏகாம்பரத்திற்கு சொந்தமானது. திரு.ஏகாம்பரத்திற்கு தாவா சொத்து எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்ற விவரம் எனக்கு தெரியாது. இவ்வழக்கை துறைசாமியின் வாரிசுகளுக்கு மட்டும எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

5. திரு.சின்னசாமிக்கு வாரிசுகள் கிடையாது. திரு.சின்னசாமியின்

மனைவி கண்ணியம்மாள். அவர்களுக்கு குழந்தைகள் கிடையாது, இவ்வழக்கின் வாதி மோகனா என்கிற சந்திரா கண்ணியம்மாளின் தங்கை மகள் மற்றும் சின்னசாமி கண்ணியம்மளின் வளர்ப்பு மகள் ஆவார். அவரை தத்தெடுத்தற்கான ஆவணம் எதுவும் கிடையாது வாய்மொழியாகதான் தத்தெடுத்தார்கள்.

6. தாவா சொத்தின் மொத்த விஸ்திரனம் 1 ஏக்கர் 9 சென்ட் ஆகும். நாங்கள் இவ்வழக்கை எங்களது பாகத்திற்கு மட்டும் தான் உரிமை கோரி வழக்கு தாக்கல் செய்தோம். எனக்கு சர்வே எண் தெரியாது விஸதிரன் 1 இடம 26 சென்டும் இன்னோரு இடம் 5 சென்ட் ஆகும். துறை சாமியின் வாரிசுகள் யார் என்ற விவரம் சரிவர தெரியாது. வாரிசுகள் யார் என்று தெரியாமல் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் துறைசாமி சின்னசாமியின் சொத்தை சேர்த்துதான் உயில் எழுதி வைத்துள்ளார் அதன் அடிப்படையில் தரப்பினரை சேர்த்துள்ளோம். உயில் பற்றி தெரியவந்ததற்கு பிறகு படித்து பார்த்தேன். அந்த உயிலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

7. மேற்படி உயிலின் விவரம் தெரியாமல் தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் இல்லை , சின்னசாமியின் சொத்தை 26 சென்டை திருவேங்கடம், கற்பகம் என்பவருக்கும் 5 சென்ட் இடத்தை சின்னம்மாள் என்பவருக்கும் எழுதிவைத்துள்ளார். உயிலில் அதிகம் இருக்கும் இடத்தை இவ்வழக்கின் 12ம் பிரதிவாதிக்கு சரியாக தான் எழுதிகொடுத்துள்ளனர் என்று சொன்னால் சரியல்ல. 12ம் பிரதிவாதிக்கு உரிய இடத்தில் தான் அவர் சுவாதினத்தில் உள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

8. சின்னசாமியின் வையோகிதத்தில் அவரை 12ம் பிரதிவாதி மற்றும்

அவரது சகோதரிகள் பார்த்துக்கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சொத்தை பிரச்சனைக்கு பிறகு தான் சென்று பார்த்தோம்.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)